# ஒளிவளர் விளக்கு



புங்குடுதீவு

## கந்தப்பு கனகரத்தினம் நினைவு மலர்

1987 ஆவணி 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

உருகும் அடியார் உள்ளூற
உள்ளே ஊறுந் தேன் வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியேவருக புலன்வழிபோய்த்
திருகும் உளத்தார் நினைவினுக்குச்
சேயாய் வருக எமையாண்ட
செல்வா வருக உமையீன்ற
சிறுவா வருக இணைவிழியால்
பருகும் அமுதே! வருக! உயிர்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பும் முகிலே வருக நறும்
பாகேவருக வரை கிழித்த
முருகவேட்கு முன்னுதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழு நீர்
முனியே வருக வருகவே.

— கலைசைச்செங்கழுநீர் விநாயகர்பிள்ளைத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமுறை மலர்கள்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் — விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

இ ரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்தநஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோ எமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுன தின்னரு ளாவடு துறையரனே.

— சம்பந்தர் தேவாரம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தி யான்அவன் என் கண்ணுளானே!

— அப்பர் தேவாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்த சுற்றமும் மற்றுவன் துணையும்
பலருங் கண்டழு தெழவுயி ருடலைப்
பிரிந்து போமிது நிச்சயம் அறிந்தாற்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்த டங்கண்ணி பங்கனை உயிரைக்
கால காலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

— சுந்தரர் தேவாரம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ(று) எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே!

— திருவாசகம்

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியுங் கொன்றையுந்
துன்றுபொற் குழற்றிருச் சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு மென்மனந்
தழன்மெழு கொக்கின்றதே!

— திருவிசைப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருந் திருவும் பொலியச் சிவலோக
  நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன்
  பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
  உமைமணவாளனு க்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
  பல்லாண்டு கூறுதுமே.

— திருப்பல்லாண்டு

ஒடுங்கு நிலைபெற்ற வுத்தம ருள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையு மில்லை யிராப்பக லில்லை
படும்பய னில்லை பற்றுவிட் டோர்க்கே.

— திருமந்திரம்

சிந்தனை செய்ய மனமமைத்
  தேன் செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்
  தேன்; கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்
  தேன்; மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்
  கிவையான் விதித்தனவே.

— பொன்வண்ணத்தந்தாதி

நன்மைபெரு கருணெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந் தெழும்பொழு
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம் [தில்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

— பெரியபுராணம்



# அம்பிகை புகழ்மாலை

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்(து)
எடுங்குற் றொழும்ப ருளக்கோயிற்(கு)
ஏற்றும் விளக்கே வளர்ச்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ(கு)
ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!

—மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ்

தனந்தரும் கல்வி தரும்ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி
ராமி கடைக்கண்களே.

— அபிராமி அந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலதி உலகத்திற் சராசரங்களை யீன்ற
　　தாயாகி னுல், எனக்குந்
தாயல்லவோ யானுன் மைந்தனன் றோஎனது
　　சஞ்சலந் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபால் ஊட்டிஎன் முகத்தையுன்
　　முன்தானை யால்துடைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
　　முறுவல்இன் புற்றருகில் யான்
குலவிவிளை யாடல்கொண் டருள்மழை பொழிந்தங்கை
　　கொட்டி வாவென்றழைத் து
குஞ்சர முகன்கந்த னுக்கிளையன் இவனென்று
　　கூறினுல் ஈனமுண்டோ!
அலைகடலி லேதோன்றும் மாருத அமுதமே
　　ஆதி கட வூரின்வாழ் வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
　　அருள்வாமி அபிராமி யே.

— அபிராமிப் பதிகம்

அன்றுகா ளத்தியினி லையனெரு வேடனிடும்
　　அவியூ னுகந்து தின்ருன்;
அலை வீசு கடலினிடை வலைவீசி னுன்; கூலி
　　ஆளாகி மண்சுமந்தான்;
சென்றுபலி கொள்ளநிர் வாணியாய்த் தெருவெல்லாம்
　　தேடித் திரிந்தலைந்தான்;
தேனுர் மொழிப்பரவை பாலிர விடைத்தூது
　　சென்றுசென் றலைதலுற்ருன்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றியின் உருக்கொண்டு பாலூட்டினான்; விறற்
பார்த்தனார் வில்லினடிகள்
பட்டு நின் றானிவைகள் பரிபவ மெனக்கொளப்
பாலிருந்து அதர முத்தம்
கன்றை நாடியபுனிற் றாவினிற் றருமம்மை
கனிவாயின் முத்த மருளே
கைலைநா யகர்பரவு கௌரிநா யகியுனது
கனிவாயின் முத்த மருளே!

— திருக்கேதீஸ்வரத்துக் கௌரிநாயகி
பிள்ளைத் தமிழ்

சுரும்புமுரல் கடிமலர்ப் பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்க ணெம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ் சிலம்பு மடிகள் போற்றி!

— திருவிளையாடற் புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# முருகன் புகழ்மாலை

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன் — பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே.

— திருமுருகாற்றுப்படை

பாதி மதிநதி போது மணிசடை
    நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
    பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முற அருள்
    மாய னரிதிரு மருகோனே
கால னெனை யணுகாம லுனதிரு
    காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல(கு)
    ஆளும் வகையுறு சிறைமீளா
ஆடும் மயிலினி லேறி யமரர்கள்
    சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
    வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
    வேலை விடவல பெருமாளே.

— திருப்புகழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளென் செயும், வினை தானென் செயுமெனை
நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயும்
குமரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும்
சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து
தோன்றிடினே.

— கந்தரலங்காரம்

பொய்யா வளமை தரும் பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டி
பூட்டும் கலன்கள் வகை வகையே
பூட்டி எடுத்து முலையூட்டி
மெய்யால் அணைத்து மறுகுதனில்
விட்டார் அவரை வெருமலுனை
வெறுக்க வேறு கடனுமுண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்து
கையால் இழைத்த சிற்றிலைநின்
காலால் அழிக்கக் கடனல காண்
காப்பான் அழிக்கத் தொடங்கில் எங்கள்
கவலை எவரோ(டு) இனியுரைப்போம்
ஐயா உனது வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியும் திருச்செந்தூர்
அரசே! சிற்றில் அழியேலே!

— திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

வரங்கொண்ட உமைமுலைப்பால்
மணங்கொண்ட செவ்வாயும்
பரங்கொண்ட களிமயிலும்
பன்னிரண்டு கண்மலரும்
சிரங்கொண்ட மறையிறைஞ்சும்
சேவடியும் செந்தூரன்
கரங்கொண்ட வேலும் என்றன்
கண்ணைவிட்டு நீங்காவே.

— சுவாமிநாத தேசிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுலக மன்ன புகழீழ மண்டலஞ்சேர்
நன்னகர நாகரிக நல்லூரே — முன்னிலருங்
காற்படையான் பூத கணப்படையான் என்னையினி
மேற்படையான் மேவும் பதி.

— சேனாதிராய முதலியார்

வேலெடுத்தும் விற்பிடித்தும் விண்ணோர் சிறைமீட்டோன்
கால்பிடித்தால் வேதனார் கையெழுத்தும் — சால
அழிந்தொழியும்! ஆனந்தம் ஆரும்! அவனைத்
தொழுந்தொழும் என்றுந் தொழும்.

நல்லூர் முருகன்நீ ஞானவேற் கந்தன்நீ!
சொல்நீ! பொருள்நீ! துணையும்நீ — எல்லோரும்
போற்றும் குமரன்நீ பொங்கும் பழனியப்பா
சாற்றும் கதிநீயே தான்!

நல்லூரான் வீதி மணலும் மறைமணக்கும்
கல்லும் கதிரைமலைக் காட்சிதரும் — மெல்லவரும்
தென்றலும் தெய்வத் தமிழ்வீசும் செந்தூரான்
நின்றநிலை காண்மின் நெடிது.

— வித்துவான் சி. ஆறுமுகம்

தேனை எடுத்துத் தினைமா வுடன்பிசைந்த
மானை மருவி மணந்தவனை — ஞானங்
கொழிக்கின்ற நல்லைநகர்க் கோயிலிலே கண்டேன்
விழிக்குப் படைத்த விருந்து!


கோயில் தனியழகு; கோபுரங்கள் பேரழகு;
வாயில் அழகு; மணியழகு - சேயுனது
தேரழகு; செல்லுந் தெருவழகு; நல்லையெனும்
ஊரழகென் றேதும் உலகு!

— சோ. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவுமதி நாறுகொன்றை யறுகுநதி சூடுகின்ற
 அசலமகள் பாதிகொண்ட திருமேனி
அனிலநில னீர்விசும்பு பனிநிலவு தீவிரும்பு
 மலரியுயி ராடமர்ந்த பெருமானின்
திருநுதலிலே யெழுந்த சுடுவிழியி லேபிறந்து
 திருமகளு லாவுகந்த மலர்வாவி
சிறுகுழவி யாகியங்க ணறுவர்தரு பால்மகிழ்ந்து
 சிவைதழுவ வாறுமொன்று வடிவாகி
சிரமுமொரு மூவிரண்டு கரமுமுய ராறிரண்டு
 திருவிழிகள் நாலிரண்டுடா டொருநாலு
திருவடிகளோரிரண்டு மருளுருவ மாகிவந்து
 செகமதுய வேயெழுந்த முருகேசா
வரையுருவ வேலெறிந்து நிருதனுடல் கூறுகண்டு
 மயிலினொடு கோழிகொண்ட திறலோனே
வலியவினை யோடவின்று விரையவர வேணுநன்று
 மலியுநலை யூருகந்த பெருமாளே.

— நவாலியூர் சோமசுந்தரப் புலவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

## கொணர்தியுன் இறைவனையே!

இத்திருப்பதிகத்தைப் பக்தியுடன் காலை மாலைகளில் பாடுவார் முருகப்பெருமானை மயிலின்மீது தரிசிப்பர்; பகையை வெல்லுவர்.

திருவளர் சுடர் உருவே
சிவைகரம் அமர் உருவே
அருமறை புகழ் உருவே
அறவர்கள் தொழும் உருவே
இருள்தபும் ஒளி உருவே
எனநினை எனது எதிரே
குருகுகண் முதல் மயிலே
கொணர்தியுன் இறைவனையே (1)

மறைபுகழ் இறைமுனரே
மறைமுதல் பகர் உருவே
பொறைமலி உலகுஉருவே
புன்நடை தரும் உருவே
இறைஇள முக உருவே
எனநினை எனது எதிரே
குறைவு அறு திருமயிலே
கொணர்தியுன் இறைவனையே (2)

இரதர்கள் பலர் பொரவே
இவண்உறை எனது எதிரே
மதிரவி பல எனதேர்
வளர்சரண் இடை எனமா
சதுரொடு வரு மயிலே
தடவரை அசைவுறவே
குதிதரும் ஒரு மயிலே
கொணர்தியுன் இறைவனையே. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவநடை மனுடர் முனே
படர்உறும் எனது எதிரே
நவமணி நுதலணி ஏர்
நகைபல மிடறு அணிமால்
சிவணிய திரு மயிலே
திடனொடு நொடி வலமே
குவலயம் வரும் மயிலே
கொணர்தியுன் இறைவனையே (4)

அழகு உறு மலர்முகனே
அமரர்கள் பணி குகனே
மழ உரு உடையவனே
மதி நனி பெரியவனே
இழவு இலர் இறையவனே
எனநினை எனது எதிரே
குழகு அது மிளிர்மயிலே
கொணர்தியுன் இறைவனையே (5)

இளை அறும் அறுமுகனே
இதசசி மருமகனே
இணர் அணி புரள்புயனே
எனநினை எனதுயிரே
கணபண அரவு உரமே
கலை உற எழுதரும் ஓர்
குணம் உறு மணிமயிலே
கொணர்தியுன் இறைவனையே (6)

எளிய என் இறைவ குகா
எனநினை எனது எதிரே
வெளிநிகழ் திரள்களைமீன்
மிளிர்சினை என மிடைவான்
பளபள எனமினு மா
பலசிறை விரி தருநீள்
குளிர்மணி விழி மயிலே
கொணர்தியுன் இறைவனையே (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகு அயில் மயில் முருகா
    எனநினை எனது எதிரே
பலபல கள மணியே
    பலபல பத மணியே
கலகல கல எனமா
    கவினொடு வரும் மயிலே
குலவிடு சிகை மயிலே
    கொணர்தியுன் இறைவனையே (8)

இகல் அறு சிவகுமரா
    எனநினை எனது எதிரே
சுகமுனிவ ரர் எழிலார்
    சுரர்பலர் புகழ் செயவே
தொகு தொகு தொகு எனவே
    சுரநடம் இடும் மயிலே
குகபதி அமர் மயிலே
    கொணர்தியுன் இறைவனையே (9)

கருணைபெய் கன முகிலே
    கடமுனி பணி முதலே
அருணையன் அரண் எனவே
    அகம்நினை எனது எதிரே
மருமலர் அணி பலவே
    மருவிடும் கள மயிலே
குருபல அவிர் மயிலே
    கொணர்தியுன் இறைவனையே. (10)

— குமரகுருதாசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தண்மை நீங்காத செம்மல்

''ஐந்தவித்தா னாற்றலகல் விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங்கரி''

யாழ்ப்பாணத்தின் தென் திசையில் கற்றவர்களும் கலைஞர்களுக்கும் பாரிஎன வாரிவழங்கும் வள்ளல்கள் நிறைந்த ஊர் புங்குடுதீவு. அவ்வூரைப் பிறப்பிடமாக கொண்ட அமரர் உயர்திரு கனகரத்தினம் அவர்களை அறியாதார் இல்லை எனலாம். இரத்தினபுரியில் பல்லாண்டு வர்த்தகம் செய்தவர். அங்கு சிவனை என் நாளும் தொழுது வழிபடும் பண்புடையவர். அழகான கம்பீரமான தோற்றம். மென்மையான வார்த்தையுடையவர். அளந்து பேசும் ஆற்றலுடையவர். இல்லறத்தை நல்லறமாக ஆற்றிய பெருமையுடையவர் அந்தணர்க்கும் அறவோர்க்கும் கற்றூர்க்கும் அலந்தார்க்கும் உற்றூர்க்கும் உறுதுணையாயிருந்தவர். மாருத வார்த்தையும் தாளாத கீர்த்தியும் தவருத சந்தானமும் அன்பகலா மனைவியையும் பெற்றபேறு உடையவர். செந்தண்மை நீங்காத செம்மல். ஆலயத் திருப்பணிகட்கு கோளுது கொடுத்த இயல்பினர். பிறந்த வீட்டையும் புகுந்த வீட்டையும் ஒன்றெனக் கருதி உயர்த்திய நற்பண்பினர். இத்தகு பெருமையுடையவர் திடீரென நம்மிடமிருந்து மறைந்துவிட்டார். நினைக்க முடியாதிருக்கின்றது. என்னே மரணத்தின் கொடுமை! இதனுலேயே ''பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்'' என்றூர் மணிவாசகப் பெருமான். பிறப்பதும் இறப்பதும் வினைப்பயனே. செயற்கரிய செய்வர் பெரியார் என்றவாறு அரியபல செய்த செம்மலை நாம் மறக்க முடியாது. அவரிடம் மிளிர்ந்த நற்பண்புகளை பின்பற்றி, அன்னூரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திப்போமாக! இறையருள் மனைவிமக்கள் அனைவர்க்கும் நிறைவு அளிப்பதாக.

''அசதோமா சத்கமய தமசோமா சத்கமய
ஜோதிர்மா அமிர்தம் கமய''

**சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**
(நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் பிரதமகுரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிப்போம்

"தருமம் தலைகாக்கும் என்ற வாக்கை நினைந்து அவ் வழி நின்று வாழ்ந்தவர் அமரர் கந்தப்பு கனகரத்தினம் அவர்கள். இவர் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகக் கொண்டவர். இரத்தினபுரியில் பிரபல்ய வர்த் தகராக விளங்கிய இவர் சிறந்த சமய சமூகத் தொண்ட ராகப் பணிபுரிந்து வந்தார். இதனால் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். புங்குடுதீவில் அம்பலவாணர் அரங்கு ஒன்றை ஏற்படுத்தியதோடு பாலர் பாடசாலையையும் பொறுப்பேற்று நடாத்திவந்த சிறப்பு இவருக்கு உண்டு.

திருக் கோயிற் பணிகளிலும் சமூகநலன் காக்கும் வேலை களிலும் ஈடுபாடுகொண்ட இவருடைய மறைவு இந்நாட் டுக்கு ஒரு பேரிழப்பாகும். இத்தகைய கருணையுள்ளம் படைத்தவர்களாலேயே நாடு நாடாக விளங்குகிறது என்று கூறினல் அதில் மிகையொன்றுமில்லை.

மலர்ந்த முகத்துடன் ஓடி ஓடி நல்ல பணிகளை ஆற்றி வந்த இப்பெரியாரின் மறைவு எம்மைப் பெரிதும் கவலை யுள் ஆழ்த்திவிட்டது. ஆனல் பிறந்தவர் இறப்பது உறுதி யாகையால் நாமனைவரும் ஆறுதலடைவோம்; அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

வணக்கம்

இங்ஙனம்

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகைத்து விட்டேன்!

அன்புச் சகோதரிமாருக்கு எழுதுவது: எனது ஆருயிர் அருமைத் தம்பி கனகரெத்தினம் தங்கக்கட்டி - மனிதருள் மாணிக்கம் - மறைந்துவிட்ட செய்தி 12-7-87 பத்திரிகையில் பார்த்ததும் திகைத்துவிட்டேன். இன்னமும் எனது திகைப்புத் தீரவில்லை. என்ன வருத்தம்? அவர் பிடித்த விரதங்களும் அவர் செய்த தர்மங்களும், தான் நேரகாலத்தோடு எங்களை விட்டு போகவேண்டும் என நினைத்துத் தான் செய்தாரோ. இரத்தினபுரியிலும் அவர் இருந்த மற்றைய இடங்களிலும் அவர் நா அசைய நாடு அசையுமே. இவ்வளவு சீக்கிரம் அவர் மறைவாரா! காலனின் கொடுமையா! நாம் செய்த பாவமா! பிறந்தவர் இறப்பது உண்மை. ஆயினும் அவர் மறைவு குடும்பத்துக்கு மட்டுமல்ல, தர்ம ஸ்தாபனங்களை நடத்தும் என்போன்றவர்களுக்கும் பேரிழப்பு. போன கார்த்திகையில் நான் கொழும்பு போயிருந்தபோது நான் தங்கி இருந்த இடம் தேடி வந்து திருவாசக விழாவிற்கு பணம் தந்தாரே! அவர் மறைந்ததாக என்னால் நினைக்க முடியவில்லையே! என் செய்வம்! விதியை யாராலும் வெல்ல முடியாது. அவர் ஆன்மா சாந்தி அடைந்து நல்லூரான் திருவடிக்கீழ் இருக்க வேண்டும் என பிரார்த்திப்போம்.

இங்ஙனம்
**சி. சரவணமுத்து**

**ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்,**
**திருக்கேதீஸ்வரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

மலர்ந்த முகம், நிமிர்ந்த சடை, நேர் கொண்ட பார்வை. நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள் என்பன அமரர் கனகரெத்தினம் அவர்களுக்குரிய சிறப்பியல்புகள். தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, சமூக வாழ்க்கையிலும் சரி நேர்மை, ஒழுக்கம், துணிவு என்ற மூன்றையும் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர் அவர் கடவுட் பத்தியும் எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தி எல்லோரையும் தன்பக்கம் ஈர்க்கும் ஆற்றலும் இறைவன் கொடையாக வாய்ந்தவை. அவை அவரது பிறப்பாலும் சமயப் பற்றாலும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. பிறக்கும் பொழுதும் அழுகின்றோம். இறக்கும் பொழுதும் அழுகின்றோம். நாங்கள் பிறக்கும் பொழுதே இறைவன் நாம் இறக்கும் திகதியையும் நிர்ணயித்து விடுகின்றான். எமது கடமைகளை நாம் சரிவரச் செய்வோமாயின் எமது மரணம் எமக்கு சொர்க்கவாசலாகவே இருக்கும்.

அமரர் கனகரெத்தினம் போன்ற சமயப் பற்றுடையவர்களை இவ்வளவு விரைவில் இறைவன் தன்னிடம் அழைத்துக்கொள்வது எமக்கு மிகவும் வேதனையைத் தருகின்றது. மரணமானது அறிவாளி என்றோ அஞ்ஞானி என்றோ, நல்லோர் என்றோ தீயோர் என்றோ பாகுபாடு காட்டுவதில்லை எனத் தெளிந்து ஆறுதல் அடைவோம்.

அமரர் கனகரெத்தினம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

''குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு''

முரசுமோட்டை
பரந்தன்

அன்பன்
என். எஸ். கே. இலட்சுமணன்
சமாதான நீதவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

அன்பு நிறை ஆசை மகனே! உங்களைக் காணாது தவிக்கின்றேன். வாழ்விலும் தாழ்விலும் காலமெல்லாம் ஒன்றாய் வாழ்ந்தோம். இனி நான் எங்கு காண்பேன்! என் செய்வேன். உங்கள் பிரிவை என்னால் தாங்கமுடியவில்லை. சித்தப்பா என்று அன்பொழுகக் கூறிய குரல் எங்கே? நான் எப்படி உங்களை மறப்பேன். நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து நெஞ்சம் பதைத்து உணர்விழந்தேன். நீங்கள் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்து மாநில வாழ்வை நீத்து மாமயில் வாகனன் முருகனது மலரடியிணையே தஞ்சம் என அடைந்தீர்கள். ஒரு நொடிப்பொழுதில் உங்கள் பபணம் முடிந்துவிட்டது. சில அறிகுறிகள் காட்டி எல்லோரையும் ஒன்று கூட்டி மகிழ்ந்தீர்கள். தெய்வ நிலையிலும் எல்லை அறியாது ஈடுபாடு கொண்டீர்கள். உங்களைத் தெய்வம் அழைத்துக்கொண்ட விதம் எல்லோருக்கும் அதிசயமாக இருந்தது. இது மெய் அடியார்க்கு கிடைக்கும் பதம். ஆக எல்லோரும் உங்கள் ஆசிவேண்டி நிற்கின்றோம்.

''முருகன் அருட்பிரவாகம்'' —''**சித்தப்பா**''

வடக்கு **வீதி**,

நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை ஐயா!

அன்பு செலுத்தி எங்களை அரவணைத்த ஆசை ஐயா கனகரெத்தினம் அவர்கள் சடுதியில் கண்ணை மூடுவார் என்று கனவுகூடக் கண்டதில்லை. இரத்தினபுரியில் இருந்த காலத்திலும் கொழும்பில் இருந்த காலத்திலும் ஊருக்கு வந்தால் தன் உற்றார் உறவினர்களை சுற்றிப் பார்க்காமல் – சுகம் விசாரிக்காமல் – போகமாட்டார்.

தன் குடும்பத்தார்க்கும் சமுதாயத்திற்கும் அவர் செய்த பணிகளும் தொண்டுகளும் எண்ணத்தை விட்டு நீங்காதவை. பெரியையா சின்னையா போன்று ஆசை ஐயா என்னும் சொல் வழக்கத்திலிருப்பதற்கு காரணம் எதுவாக இருக்கலாம்? விருப்பமானவர் என்ற கருத்தில் – எவராலும் விரும்பப்படுவர் என்ற பொருளிலேதான் — ஆசை ஐயா ஆசை அம்மா ஆசை அண்ணு ஆசைத்தம்பி முதலிய தொடர்கள் தோன்றியிருக்கவேண்டும்.

எங்கள் ஆசைஐயா எல்லாரோடும் கொண்டாடிப் பழகியவர். இதனுலேயே அவர்பிரிவு எங்களைத் துன்புறுத்துகிறது. இன்னும் இருப்பார் – இன்ா அன்புடன் மகளே என்று கனிந்து தெளிந்து அழைப்பார் – என்ற ஆசை பொய்த்துப் போனதே! நேற்று இருந்தவரை இன்று இல்லாமல் செய்யும் பெருமை படைத்த இந்த உலகு ஆசை ஐயாவையும் இல்லாமல் செய்து பெருமைப் பட்டயம் கட்டிக் கொண்டது. உலகத்து இயற்கைக்கு மாற்றம் காண்பது எம்மால் முடியுமா?

அன்புக்கு, ஆலோசனைக்கு, இன்முகத்துக்கு, உவகைக்கு, ஊக்கத்திற்கு, ஒருவராய் நின்ற ஆசை ஐயா போய்விட்டார். அவர் ஆன்மா இறைவன் திருவடிகளில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

— பரமேஸ்வரி வயித்திலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் இரங்கற் செய்தி

அமரர் க. கனகரெத்தினம் அவர்கள் 9–7–87 வியாழக் கிழமை இரவு பேராவியற்கை எய்தியமை சைவ உலகுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும் நட்புரிமைக்கு இலக் கணமாக சாதி சமய இனபேதமேதும் பாராட்டாது எல் லோரிடத்தும் அன்புடையராகி பிறர் நலம் பேணும் பெருந் தகையாக வாழ்ந்தவர் அவர். 1929ஆம் ஆண்டு திருப்பூங் குடியில் சைவ வேளாண் குலத்தில் திரு. கந்தப்பு அவர்க ளுக்கும் அன்னப்பிள்ளை அம்மையாருக்கும் புதல்வராகப் பிறந்தார். பிறந்தநாள் முதல் இறுதிநாள்வரை தாயிற் சிறந்தவொரு கோயிலும் இல்லை என்பதற்கமைய தாயாரைத் தெய்வமாகப் போற்றும் மரபைப் பேணிக்காத்து வாழ்ந்த வர் என்பதை நான் நன்கு அறிவேன். சிறந்த முருகபக்த ரான கனகரெத்தினம் அடியார்க்கு அமுதூட்டுவதிலும் இறந்தோர்க்கு உதவுவதிலும் நண்பர்களைப் பேணுவதிலும் உறவினரை ஓம்புவதிலும் பிறர் இடர்களைவதிலும் தன்னை ஒறுத்துப் பிறரை வளர்த்தவர் என்பது இவர்களுடன் பழ கியவர்கள் அனைவரும் நன்கு அறிந்த உண்மையாகும்

> **"விசுதும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
> மிச்சில் மிசைவான் புலம்"**

என்னும் திருக்குறளின் கருத்தை இவருடைய வாழ்க்கை யில் இருந்தே அறிந்து கொண்டேன். மனைவி பத்மாசனி தேவியும் இவரது மனம் கோணாது ஒழுகும் இயல்புடையவ ராகி இல்லறத்தை நல்லறமாகப் போற்றியமையால் கலா மதி, வளர்மதி, மயூரதன், கலைமதி, எனும் குலக்கொழுந் துகள் வாய்த்தன. உழைப்பால் கிடைத்த செல்வம் அனைத் தும் சிவன் தந்தது என்ற நினைவுடன் தானதருமங்களிலும் உலகத்தாருக்கு உதவுவதிலும் பிறர்நலம் பேணுவதிலேயும் செலவிட்டு அதில் நிறைவுகண்ட கருணையாளர். இவர் மனப்பக்குவத்திற்கேற்ற பண்புடையாளனாக மருமகனும் அமைந்தார். மக்கள் சேவையே மகேசன் சேவை என உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டு பெரியபுராணத்துப் பூசலார் நாயனுர் போன்று மறவாமையால் அமைத்த மனக்கோயிலில் இறைவனை என்றும் பூசித்து வந்தமையால் நொந்து துயருற்று தீரா நோயில் அழுந்தாது, இவ்வுலக வாழ்வு போதுமென விரும்பியதும் மகளையும் பேரக் குழந்தையையும் கண்டு கழிபேருவகையுற்று இருநிலவாழ்வு அநித்தியம் ஆதலின் நித்தியனுய்ய பெருங்கருணை வள்ளலாய் முத்தியின்பம் அருளுபவனுய சிவன்தாள் அடைதலே பேரின்பம் என்பதை உணர்ந்து இறவாத இன்ப அன்பு நாடி நித்திய பேரின்பப் பெருவாழ்வு எய்தியமை என்றும் மறக்க முடியாதது.

தெய்வமெனப் போற்றும் அன்புக் கணவனை இழந்து ஆருத்துயருறும் அருமை மனைவி பத்மாசனி தேவிக்கும் ஆறுதல் வார்த்தை கூறி அன்புக் கரத்தால் அரவணைக்கும் எங்கள் அப்பாவை இனி எப்போது காண்போம் எனக்கதறி அழும் அன்புக் குழந்தைகளுக்கும் மாசற்ற உள்ளத்தால் மருமகனுக என்னை ஏற்று மகிழ்ந்த மாமா என மறுகும் மருமகனுக்கும் ஆசை அத்தான் என்று அலறும் மைத்துனர் மைத்துனிமாருக்கும் பெரியப்பா எனக் கதறும் பெருமக்களுக்கும் கவலையில் ஆழ்ந்த சகலனுக்கும் ஆசையோடு அறிவுரை கூறி நேசமாக நினைவில் நிறைந்த அண்ணுவோ என அலறும் சகோதரங்களுக்கும் ஆரத் தழுவி அன்பு சொரிந்த தாத்தாவோ என அழும் பேரக் குழந்தைக்கும் கூறும் வார்த்தையிலும் குறை ஏதும் நேராது குறைதீர்க்கும் அகன்றும் குலக் கொழுந்தே எனக் குமுறும் உற்ருர் உறவினருக்கும் தேடக்கிடையாத தென்னமுதம் போன்ற மைந்து தேடி வந்து எமக்குதவும் தேவே எனத்துடிக்கும் அடியவர் – அன்பர் கூட்டத்திற்கும் நாட்டுநிலை நெருக்கடியால் நாமிடர்ப்படும்போது நானிருக்கப் பயமேனென நாடிவந்து உதவிடும் நண்பனேயோ வென நலியும்நண்பர் குழாத்திற்கும் ஆறுதல் கூறி மனத்துயரை மாற்ற வார்த்தையற்றுத் தவிக்கிறேன்.

**''வினைப்பயனை வெல்ல வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையை ஆற்ற எல்லாம் வல்ல இறையருளே துணை செய்ய வேண்டும்.

"யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே எம்பெருமான் எம்
மானே உன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே"
[திருவாசகம்]

என்னும் பாடலுக்கமைவாக தமது வாழ்வை அமைத்துக்கொண்டு ஆலய சேவையும் அரன் பணியும் அடியார் தொண்டும் அன்புடன் செய்து தமது அறுபதாவது வயது முடியுமுன் ஆறுபடை வீடுடைய ஆறுமுகன் தலங்கள் யாவையும் தரிசித்து என்றும் இறைபதம் பணிந்த மெய்யன்பராக வாழ்ந்தவர். ஆனதனுல் முருகன் அமரர் கனகரெத்தினம் அவர்களது பரிபக்குவ நிலையைக் கண்டு பேரருள் பாலித்து, தனது பாதார விந்தங்களிலே சேர்த்துக் கொண்டான். நாமோ உற்றவிடத்து உதவும் ஒருவரை இழக்கும் நிலைக்கு ஆளாகிவிட்டோம்.

அமரர் கனகரெத்தினம் அவர்களது இனிய பண்புகளும் அன்பாகப் பழகும் சுபாவமும் அனைவரையும் ஆதரவுடன் அணைத்து ஆறுதல்கூறும் இயல்பும் மறக்கவொண்ணுதவை. பெருங்காயப் பாத்திரம் பெருங்காயம் நீங்கினுலும் மணம் நீங்காதிருப்பது போல உடலாம் எம்மை விட்டுப் பிரிந்த அமரர் உள்ளத்தால் எம்மை விட்டு நீங்காது இருப்பார். அவர் சிரஞ்சீவி ஆகிவிட்டார்.

எமது உள்ளம் காலத்தால் சாந்தி பெறவும், அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரம், உற்ருர், உறவினர், அன்பர்கள் நண்பர்கள் அனைவரது உள்ளங்களும் சாந்தி பெறவும், அமரர் கனகரெத்தினம் அவர்களது ஆன்மா சாந்தி அடையவும் இறை அருளை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

சிவபுண்ணியச் செம்மல்
க. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுத்துச் சிவந்தகை

பெரியார் கனகரத்தினத்தைச் சந்தித்த அந்த நாள் இன்னும் என்நெஞ்சில் பசுமையாக இருக்கிறது. 'முருகன் அருட்பிரவாக'த்தில் இசைக் கலைஞர்கள் பலர் குழுமியிருந்தார்கள். நண்பர் பொன். சுந்தரலிங்கத்தின் ஒலிப்பதிவு நடந்துகொண்டிருந்தது. அருட்பாக்களைக் கேட்டு உருகியபடி மூலையில் இருந்தார் அவர்.

அம்மனிதரிடம் காணப்பட்ட எளிமை, அடக்கம், பக்தி எல்லாம் என்னை அவர்பால் ஈர்த்தன. அதன்பிறகு பல முறை அவரைச் சந்தித்திருக்கிறேன். இன்சொல்; மாருத புன்னகை; குளிர்ந்த பார்வை — இவையன்றி வேறெதையும் அவரிடம் நான் கண்டதில்லை.

கனகரத்தினத்தாரின் குணநலன் என்னும் பேராறு என்னை முழுதும் விழுங்கலாயிற்று. பொருளையே தேடி, பொருளையே காத்து, பொருளையே வழிபடும் வணிகர்களிடையே பொருளைப் பொருட்படுத்தாத இவர் ஒரு புதுப் பிறவியாக விளங்கினர்.

இரத்தினபுரியில் அவருக்கிருந்த செல்வாக்கு! அவர் நா அசைந்தால் அந்நகர் அசையும். எந்தப் பொதுப் பணியும் இவர் பங்கு பற்ருது நடந்ததில்லை. என்ருலும் 1977இல் ஒருநாள் — திடீரென்று — எல்லாம் இழந்தார். கொழும்புக்கு இடம்பெயர்ந்து தொழில்புரியலானர். 1983 ஆடியோடு ஈடாடிப்போனர். ஆனலும், இழந்த நாணயத்தைவிட, தம்முடைய நாநயத்தைப் பெரிதாக மதித்த கனகரத்தினம், கலவரத்தின்மேல் பழியைப் போட்டுவிட்டுக் கையைவிரிக்காமல் கொடுக்கும்தியான தொகைகளை ஒழுங்காகச் செலுத்திவந்தார்.

அப்பொழுதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. கனகரத்தினத்தார் வாங்கிக்கொடுத்த இரத்தினக்கல் ஒன்ருல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய லாபம் சம்பாதித்த சிங்கள நண்பரொருவர் (அவர் மறுத்தும் கேளாமல்) ரூ 10,000/– ஐ அன்பளிப்பாகக் கொடுத்துச் சொன்னார். அத்தொகையைக் கொண்டு தம் கைகடனை அடைத்திருக்கக்கூடுமாயினும், அங்ஙனம் செய்யாது, அதை முழுதாகக் கோயிலுக்குக் கொடுத்துவிட்டார்!

கனகரத்தினத்தாரைப் பொறுத்தவரை ஆண்டவன் ஏதோ அண்டங்களுக்கப்பால் இருப்பவன் அல்லன்; மிக நெருக்கமானவன். ஓர் உதாரணம்: Terrazo வேலைப்பாடு செய்த தளத்தை ஓரிடத்திற் கண்ட பெரியாருக்கு முருகன் ஞாபகம் வந்துவிட்டது

என் அப்பனுக்கு இது நல்லாய் இருக்குமே''
''உன்னைச்சிங் காரித் துனதழகைப் பாராமல்
என்னைச் சிங் காரித் திடர்ப்பட்டேன்!...''

என்று கழிவிரக்கம் கொள்ளும் நிலையைக் கடந்தவர் அவர். பணமுடையிலும், அப்பணிச்கு ரூபா 25,000/– கொடுத்த பின்பே அவர் மனம் அமைதிகொண்டது

அமரரின் மைத்துனிக்குத் திருமணம் ஏற்பாடாகியிருந்தது. எல்லாம் செவ்வனே செய்யப் பொருள் இல்லை. குடும்பத்தினர் தவித்துக்கொண்டிருந்தனர். செய்யவேண்டியது எது என்பது கனகர்கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. யாரும் கேளாமலே சீதனமாகத் தாம் பெற்ற சொத்து முழுவதையும் மைத்துனிக்கு எழுதிக் கொடுத்துவிட்டார். ''என் பெண்பிள்ளைகளுக்கு ஆதாரம் ஏது?'' என்று எண்ணும் சராசரி யாழ்ப்பாணத் தமிழரிலிருந்து வேறுபட்டவர் அவர்.

''ஆற்றில் போட்டாலும் அளந்து போடவேண்டும்'' என்பதில் எல்லாம் நம்பிக்கை வைக்காதவர் அமரர் கோயில்களுக்கு, அடியார்களுக்கு, குழந்தைகளுக்கு, கலைஞர்களுக்கு என்று வாரி வழங்குவார். ஓர் அந்தணருக்குத் தானம் செய்து அவர் மனம் நிறைவதில்லை. ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கூட்டத்தையே அழைப்பார். மருத்துவமனைக்கு ஒருவரைப் பார்க்கச் சென்றால் பக்கத்துக் கட்டிலில் இருப்பவருக்கும் யோகம்! கொடுத்துக் கொடுத்துச் சிவந்தகை அவருடையது!

அமரர் கனகரத்தினத்தின் விரிந்த உள்ளத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய கணிப்பு எது தெரியுமா? இனங்களுக் கிடையேசகப்புணர்வே நிலைத்துவிட்ட இக்காலத்தில், அவருடைய திடீர் மறைவைக் கேள்வியுற்ற சிங்கள நண்பர்கள் இரத்தினபுரியிலிருந்து கொழும்புக்கு வந்து அன்னாருக்கு அஞ்சலிசெலுத்தியமையே ஆகும்.

— சோ. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமர வாழ்வு

இந்துமா கடல்நடுவே எழில்முத் தாக
இலங்குகின்ற ஈழத்தில் அழகு கொள்ளை
சிந்துகின்ற யாழ்க்குடா நாட்டின் தென்பால்
தீ(வு) ஏழுள் நாயகமாய்த் திகழு கின்ற
புங்கையினில் **கந்தப்பு அன்னப்பிள்ளை**
புரிதவத்தின் பயனுகப் புதல்வர் மூவர்
வந்துதித்தார் அவர்களுள்ளும் நடுவில் வைத்த
மாணிக்க மாயமைந்தார் **கனகரத்னம்!**

ரத்னபுரிக் கிளவயதிற் சென்று சொந்த
முயற்சியினுற் படிப்படியாய் உயர்ந்தார்; ஆங்கு
புத்தமதத் தவரெல்லாம் மதிக்கும் வண்ணம்
பொதுத்தொண்டில் ஈடுபட்டார்! ஈட்டும் செல்வம்
அத்தனையும் அவன்தந்த தாத லாலே
அவற்கிதுமற் றெனக்கிதுவென் றெண்ணுகின்ற
தத்துவத்தைத் தள்ளிஆன் மீக வாழ்வை
தமதாக்கி ஞர்கனகர்; தளர்ச்சி காணுர்!

மாமஞர் மகள் **பத்மாசனி** யிவர்க்கு
மனைவியாய் வாய்க்கஇல் லறத்தை மிக்க
சேமமொடு நடத்திச்செல் விருந்தை ஓம்பி
திருப்பணிகள் பலசெய்து வாழு நாளில்
மாமகளாய்க் **கலாமதி**யும் வந்தாள்; பின்னர்
**வளர்மதி**யும் **கலைமதி**யும் பிறந்தார்; மைந்தன் —
நாமமது **மயூரதனும்** — வாய்த்தான்; எல்லா
நலங்களுமே பிள்ளைகள்பால் நிறையக் கண்டார்!

ஐக்கியநாட் டொன்றியத்தில் கடமை யாற்றும்
அருங்குணத்து **வன்னியசிங்கத்தை** மெச்சி
தக்கமரு மகனுக்கிக் கலாமதிக்குத்
தகுந்ததுணை யெனக்கண்டு பேரனுகப்
பெற்றனர் **கார்த்திக்கை** அவன் மழலைகேட்கப்
பெற்றுடலின் வாதைகளை மறந்து "யாவும்
முற்றிய(து); என் இனியெனக்கு? என்று" சொன்ன
முழுப்பொருளை அவர்பிரிவால் உணர்ந்துகொண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்போதும் மலரெடுத்துப் பக்தி யோடு
முருகனடி மலர்மீது தூவும் கைகள்;
எப்போதும் அவன்நாமம் பயிலும் நாக்கு;
எந்தைதிருக் கோயில்வலம் வரும்பா தங்கள்;
ஒப்போதும் இல்லாத பரந்த நெஞ்சம்;
ஊர்உலகம் யாவையுமே தழுவும் அன்பு;
தப்பேதும் கண்டுவிட்டால் பொங்கும் சீலம் —
தருமவான் கனகரது கோலம் காட்டும்!

வன்செயலால் பொருளெல்லாம் இழந்த போதும்
மனங்கலங்கா மாமனிதர் "இறைவா! இங்கே
என்செயலென் றேதுமிலை; என்வீடென்றோ
என்பொருளென் றேஏதும் இல்லை! எல்லாம்
உன்செயலே, உன்பொருளே, உன்றன் ஆணை
இன்றியொரு துரும்பேனும் அசைவதில்லை!
பின்கவலை, ஏமாற்றம், கோப தாபம்
பேதையர்கள் செயலன்றோ?" என்று கேட்பார்!

வாழ்வுவரின் தலையாலே நடந்து தெய்வம்
மறந்துதா மேபிரமம் எனத்த ருக்கித்
தாழ்வுவரின் "கடவுளுக்குக் கண்ணே இல்லை;
சாமிவெறுங் கல்லா?" என் றிகழ்வோர் முன்னே
வாழ்வினிலும் தாழ்வினிலும் இறைவன் தாளை
மறவாத கனகர்ஒரு பிறவி; வல்ல
ஊழ்வினையும் இவரிடம்தோற் றோடல் கண்டோம்
உத்தமனூர் ஒருகர்ம யோகி — உண்மை!

அன்பாளர்; முன்னறியா தார்மே லும்செல்
அருளாளர்; பயில்தொறும் நூல்நயத்தைப் போலும்
பண்பாளர்: பழுத்தமனத் தடியர்; செல்வம்
பகுத்துண்ண, பணிசெய்ய என்றே கொள்ளும்
நண்பாளர் அவன்சித்தம் அன்றி ஏதும்
நடப்பதிலை எனநம்பும் கனகர் இன்று
விண்போனூர் என்பதுபொய்! அன்பர் பேச்சில்
விடும்மூச்சில் நெஞ்சிலெல்லாம் வாழுகின்றூர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் பாமாலை

## தாய்

தந்தையில தேவளர்த்த பிள்ளை, இந்தத்
தறுகுறும்பு செய்தானென் றெவரும் வாசல்
வந்ததில்லை! கனகையா! சிறுவணுக
வாணிபஞ்செய் தெமைக்காத்தாய் அம்மா
நொந்திடுதல் கூடாதென் ஞேடியோடி [நெஞ்சம்
நூறுமுறை வருவாய்இன் றேனே என்னை
முந்திவிட்டாய்? நான்பெற்ற முத்தே! நல்லூர்
முருகனுனை அழைத்தென்னை வென்றுவிட்டான்!

## சகோதரர்

உம்முடனே உடன்பிறந்தோம் என்றுளத்தே
அளப்பரிய உவகை உற்ரும்
எம்முடனே ஒருசொல்லும் பேசாதிவ்
வுலகினையேன் இன்று நீத்தீர்?
செம்மைநெறி ஒழுகிவந்த சீராளா பெறற்கரிய
செல்வமே! நாம்
இம்மையிலும் எழுமையிலும் சோதரனுய்
உமைப் பெறுமவ் வரத்தைக் கேட்போம்!

## மனைவி

தாயில்லா(து) எழுவரும்நாம் தளர்ந்திருந்த
போதெம்மைத் தாங்க வந்தாய்!
"வாயில்லாச் சீவன்கள், பார் வேளா வேளையுண
வளிக்க வேண்டும்;
தாயில்லை எனவுணரா வகை யிவர்கள்
தமை நாங்கள் வளர்க்க வேண்டும்!"
நீயந்நாள் உரைத்தபடி கடைசிவரை
வாழ்ந்துவந்த நேர்மை என்னே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானிழந்த பயிராகி வாடிநைந்தேன்!
மதியிழந்த வானமெனப் பொலிவுமற்றேன்!
தேனிழந்த மலராகிச் சிந்தைநொந்தேன்!
திசையிழந்த கப்பலெனத் தத்தளித்தேன்!
யானிழந்தேன் உன்னையெனில் உலகில்வேறு
யார்க்காக இனிநானும் வாழ்வதையா?
ஊனிருந்த உயிர்போல என்னுள் வாழ்ந்தாய்!
உனைப்பிரிந்த பின்னெனக்கு வாழ்க்கைஏது?

## மக்கள்

கண்போல எமைக்காத்த கருணையாளா!
கவலையெனும் கடலுக்குக் கரைகாட் டாயோ!
மண்மீதில் நீயளித்த சிறப்பினால் நாம்
மனிதரென வாழ்கின்றோம்! மறைந்து நீயும்
விண்போனாய் என்றெண்ணும் போதிலெல்லாம்
வேகுதே எம்நெஞ்சு! விம்மி விம்மி
எண்ணாத எண்ணமெலாம் எண்ணி னாலும்
இனியெமக்கா தரவுரைக்க எவருமுண்டோ!

வற்றாத ஊற்றெனவே சுரக்கும் அன்பின்
வகையுணர்ந்தோம் உன்னாலே எமக்கு வாய்த்த
நற்றாய்நீ தந்தைநீ நட்பும் நீயே
நம்மையாள் தெய்வமே! எமக்கு நோய்வந்(து)
உற்றாலே துடிதுடித்தாய்; யாவும் செய்தாய்
உயிர்போல எமைப் பேணிப் பாதுகாத்தாய்!
பெற்றோனே! எப்பிறப்பில் தந்தை யாகப்
பெறுவதுநாம் உனையையா, பேசுவாயே!

## மைத்துனர்

இளவயதில் அன்னையையாம் இழந்தோ மேனும்
இடரறியா தெமைவளர்த்த பாங்கை எந்நாள்
உளம்மறக்கும்? ஊர்ஊராய்த் தொழில்செய்தாலும்
ஒருகுடும்ப மாகயாம் நிலைக்க வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையிலே மனைவியொடு வாழும் வாழ்வை
எமக்காகத் துறந்தபெருந் தியாகமூர்த்தி!
வளமையெலாம் காணுகையில் எம்மைக் காண்பாய்
மறந்தனையோ அன்புருவே எம்மையெல்லாம்?

மைத்துன னென்றுனை நாங்கள் காணவில்லை!
வாய்த்ததொரு தந்தையென்றே மதித்துவந்தோம்!
புத்திசொல, வளர்த்தெடுக்க, யாம்செய் குற்றம்
பொறுத்திட, நம் வளர்ச்சியினைக் கண்டு கண்டு
மெத்தமகிழ்ந் துளமார வாழ்த்த, ஏதும்
வேற்றுமைகா ணுதன்மைச் சொரிய உன்போல்
உத்தமனே மற்றொருவர் உலகில் இல்லை!
உண்மையிஃ துண்மை வெறும் புகழ்ச்சி யில்லை!

## பேரன்

தாத்தாவுன் தோள்களில்நான் தாவிவிளை
யாடியநாள் அதிகமில்லை!
'கார்த்திக்!'என் றெனை நீங்கள் கனிவோடு
கூப்பிடநான் கைகள் கொட்டி
'சீக்கோதாத் தா!' என்பேன் தித்திப்புப்
பண்டங்கள் தின்னத் தந்து
தூக்கிவிளை யாடியதெல் லாம்கனவோ?
அந்தநாள் தொடர்ந்தி டாதோ!

## தேற்றம்

நேற்றிருந்தார் இன்றிலையென் றொருபெருமை
உலகுக்கு நெடுக உண்டு!
கூற்றுவனர் நல்லோர்மேல் கொள்கின்ற
காதலுக்கோ எல்லை யில்லை!
மாற்றரிய வல்விதியை வென்றவர்கள்
யாருமிலை உலகில் என்றே
தேற்றுவமெம் உள்ளத்தை கனகர்இருப்
பார் இறைவன் திருவ டிக்கீழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நடந்தாய்?

மாமாவென் றழைத்த குரலம்பாகி
என்மனதை வாட்டு தையா!
சீமானய் வாழ்ந்திருந்த சிறப்பையெலாம்
நினைக்க உளம் திகைக்குதையா!
கோமானே! கனகரெட்ண குணக்குன்றே!
இறைபதம் நீ குறுகினலும்
போமோ நின் திருவுருவம் என்மனதை
விட்டகலப் போவ தில்லை.

பெற்றெடுத்த தாய்தன்னைப் பெருமையுடன்
தெய்வமெனப் பேணிக் காத்த
நற்றவத்தான் எனஉன்னை நாவாரப்
புகழுகிறார் நல்லோர் நாளும்
உற்றதுணை தேவையென உடன்பிறந்த
தம்பியையும் கூட்டிச் சென்ற
பெற்றிதனை நினைக்க மனம்பேதலித்து
கண்களில் நீர் பெருகுதையா!

வாணருக்கு அரங்கமைத்தாய் வகைவகையே
நற்றொண்டும் வகுத்துச் செய்தாய்
மாணவர்க்கு படித்திடவே கழகமொன்றை
அமைத்து மனமகிழ்வும் கொண்டாய்
ஊணுறக்க மின்றியே உழைத்துயர்ந்தாய்
உனதுபுகழ் உலகம் போற்றும்
காணுதற்கே அரியசிவன் கழலிணையே
இறுதி எனக் கருதினயோ!

வில்லிசையில் வல்லவனும் உன்அண்ணன்
ஆறுமுகன் விருப்ப மற்றே
சொல்லிசையில் வல்லவனும் சுந்தரனின்
உத்தரவும் துறந்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவராய் வாழ்ந்திடுமுன் இனத்தவர்கள்
நவின்றிடு நல்வார்த்தை அற்றோ
செல்லநினைந்தாய் உன்றன் செயல்கேட்ட
மனமுருகித் திகைக்குதையா!

கற்புடைய அருந்ததியை, வாசுகியை
வென்றுவிட்ட கற்பின் நல்லாள்
பொற்புடையமனைவி பத்மாசனியும் இந்தத்
துயரத்தைப் பொறுப்பாளோ தான்
பெற்றெடுத்த உன்அருமைப் பெண்மக்கள்
புலம்பு கின்றார் பேதலித்து
நற்றவத்தாற் பிறந்தமகன் மயூரனையும்
மறந்தெங்கே நடந்திட்டாய் நீ?

இரத்தின நற்புரியமர்ந்த இறைசிவனார்
திருப்பதமே எண்ணினையோ?
பரங்கிரிவாழ் நல்லூரான் பதமதுவே
துணையென நீ பறந்திட்டாயே?
வரங்கள்பல அருளுந்தெல்லைப் பதிவளரும் (தெல்லிப்பளை)
துர்க்கை பதம் வவ்வினையோ?
கரம் குவித்தே இரங்குகின்றோம்
காரணம்நீ கூறாயோ? கவலைபோக?

பிறந்திடு நல்லுயிர்க ளெல்லாம் இறந்திடுதல்
உறுதியெனும் பெரியோர் சொல்லை
மறந்திடுதல் நன்றன்று மாற்ற மிதற்
கொன்றில்லை மக்காள்! கேண்மின்
திறந்த மனத்தினராவீர்! தீமைகளை
அறமறந்து சிறப்புற் றோங்கும்
அறந்தவறா இறைபதமே உறுதியென
நினைந்து மனஅமைதி கொள்வீர்!

1, Allee Jean – Mermoz
93390, Clichy – Sous, Bois — A. K கந்தையா
FRANCE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது குடும்பத்தலைவரின் மறைவு கேட்டு —

* தொலைபேசிமூலமும் தந்திமூலமும் ஆறுதல் கூறிய வெளிநாட்டு உள்நாட்டு அன்பர்களுக்கும்
* கொழும்பில் துக்கம் விசாரித்த இனபந்துக்கள், வர்த்தக நண்பர்கள், அயலவர்களுக்கும்
* கொழும்பிலிருந்து பூதவுடலோடு யாழ்ப்பாணம் வந்தோர்க்கும்
* குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து — குறிப்பாக புங்குடுதீவிலிருந்து வந்து — இறுதிக் கிரியைகள் முடியும் வரை எம்முடன் தங்கி எம்துயரில் பங்குகொண்ட அன்புள்ளங்களுக்கும்
* நேரில் வந்து ஆறுதல் கூறிய அந்தணப் பெருமக்களுக்கும் சமயச் சான்றோர்களுக்கும்
* கீரிமலையில் நடந்த அந்தியேட்டியிலும், நல்லூரில் நடந்த வீட்டுக்கிருத்தியத்திலும் பங்குகொண்ட அனைவர்க்கும்
* 13-8-87 இல் இராமேஸ்வரத்தில் நடக்கும் அந்தியேட்டியில் கலந்துகொண்ட உற்றார் - உறவினர்க்கும்
* இம் மலரைத் தொகுத்துத் தந்த பலாலி ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் திரு. சோ. பத்மநாதனுக்கும்
* குறுகிய காலத்தில் அச்சுவேலையை அழகுறச் செய்த ஸ்ரீ லக்ஷ்மி அச்சகத்தினர்க்கும்
* இன்னும், ஒல்லும் வகையால் உதவிகள் புரிந்த ஏனையோர்க்கும்

எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி உரியது

77, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

— அமரர் கனகரத்தினம்
குடும்பத்தினர்

ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம், 37, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org